1974 சனவரி 23]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதற்காக மொத்தம் ரூ. 22.5 இலட்சம் செலவாகும். அது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறது. நிதிநிலையைப் பொறுத்து எடுத்துக்கொள்வதற்கு அரசு முயற்சிக்கும்.

இரயில் பாதைகளை மாற்றியமைத்தல்

***105 வினா—திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலிருக்கும் மீட்டர் கேஜ் ரயில் பாதைகளை எல்லாம் பிராட்கேஜ் பாதைகளாக மாற்றக்கோரி மத்திய அரசுக்கு பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழகத்தில் இருக்கும் சில மீட்டர் கேஜ் இரயில் பாதைகளை பிராட்கேஜ் பாதைகளாக மாற்றக்கோரி மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Works whether the Salem-Bangalore metre gauge lines will be converted into broad-gauge lines ?

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, we have not recommended that scheme.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே சில ரயில் பாதைகளை பிராட்கேஜாக மாற்ற வேண்டுமென்று முதலமைச்சர்கள் மாநாட்டிலே நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஐந்தாண்டு திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று வற்புறுத்தினார்களே, அதில் எந்த எந்தத் திட்டங்களை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எந்தத் திட்டத்தையும் மத்திய அரசு இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. முதல்வர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் பரிசீலனையில் இருப்பதாகத் தான் தகவல் இருக்கிறது.

திரு. ஓ. என். சுந்தரம்: தலைவர் அவர்களே, கரூர்-திண்டுக்கல் தூத்துக்குடி அகல ரயில் பாதை ஏற்கனவே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

அப்படி சேர்க்கப்பட்டு, சர்வே எடுக்கப்பட்ட அந்தத் திட்டத்தை முதல் பிரையாரிட்டியாகக் கொண்டு, நிறைவேற்ற அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சேலத்திலிருந்து திண்டுக்கல் வரையில் கரூர் வழியாக புதிய ரயில் பாதை போடும் திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருந்து, மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. முதல்வர் அவர்கள் ரெயில்வே சிபாரிசு செய்யுயப்பட்டிருக்கிறது. முதல்வர் அவர்கள் ரெயில்வே அமைச்சரோடு பேசும்போது, இதை வலியுறுத்திக் கூறி இருக்கிறார்கள்.

திரு. க. உரா. எட்மண்ட்: சென்னையிலிருந்து தூத்துக்குடி வரையில் இருக்கும் ரயில் பாதையை அகலப் பாதையாக்க அரசு சிபாரிசு செய்திருப்பதாக பத்திரிகையில், படித்த ஞாபகம் எனக்கு இருக்கிறது. மணியாச்சியிலிருந்து தூத்துக்குடிக்கு அந்தப் பாதை விலகிச் செல்கிற காரணத்தால், மணியாச்சியிலிருந்து திருநெல்வேலிக்கு 18 மைல்தான் இருக்கிறது. ஆகவே, அப்பாதையை அகலப் பாதையாக்க அரசு சிபாரிசு செய்யுமா? கூடுமானால், புதிதாக அமைக்கின்ற கன்னியாகுமரி பாதையையும் அகலப்படுத்திப் போட இந்த அரசு சிபாரிசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சென்னையிலிருந்து தூத்துக்குடி வரையில் நேரடியாக அகலப் பாதை போட நாம் சிபாரிசு செய்யவில்லை. ஆனால், மணியாச்சியிலிருந்து அந்தப் பாதையை அகலப்படுத்தி அமைக்க வேண்டுமென்று நாம் சிபாரிசு செய்திருக்கிறோம். அதை அவர்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

THIRU B. VENKATASWAMY: Sir, I came to understand that it is the policy of the Government of India to lay broad-gauge lines because the metre-gauge lines are not economical. May I know from the Hon. Minister for Works whether our State Government had recommended the conversion of metre-gauge lines into broad-gauge lines and if so whether the Government of India has accepted the proposal to convert them into broad-gauge lines ?

1974 சனவரி 23]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற இருப்புப் பாதைகளை அகல இருப்புப் பாதைகளாக மாற்றுவது என்று சொன்னால் வருவாயைப் பொறுத்துத் தான் மாற்றமுடியும், சிக்கனம் உள்ளதாக இருக்குமா என்று பார்த்துதான் செய்ய முடியும் என்று சொல்கிறது மத்திய அரசு. மாண்புமிகு அங்கத்தினர் சொல்வது போல் எந்தக் கருத்தும் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, அண்மையிலே மத்திய ரயில்வே அமைச்சர் திரு. மிஸ்ரா அவர்கள் இங்கே விஜயம் செய்தார்கள். அவர்களோடு என்னென்ன பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. என்ன முடிவுகள் எடுக்கப் பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அவர்களை நான் சந்திக்கவில்லை.

நெல்லை மாவட்டத்திலுள்ள கோட்ட நிலநீர் பொறியாளர் அலுவலகம்

*106 வினா—**திரு. தி. சி. அ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் Tamil Nadu Ground-Water Engineering Division நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் (Executive Engineer) எப்பொழுது திறக்கப்பட்டது?

(இ) அந்த அதிகாரி தன் கீழ் வேலை பார்க்க எந்தெந்த வேலையாட்களை நியமனம் செய்திருக்கிறார்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) 4—12—1971 அன்று தொடங்கப்பட்டது.

(இ) கீழ்க்கண்ட சிப்பந்திகள் திருநெல்வேலி நிலநீர்க் கோட்டம் நிலநீராளர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளனர்:—

1. படிவரைவாளர்	1
2. நீலப்படிவரைவாளர்	1
3. கடைநிலை ஊழியர்கள்	7